கண்டறியப்பட்டு, கையகப்படுத்தப்பட்டு, அந்தத் திட்டத்திற்கு வரவேற்பு இருந்தால், நிச்சயமாக ஆரணி பகுதியில் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

49—

அங்கன்வாடி மையம்

***15888—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, கத்தலூர் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்தினைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், கத்தலூர் ஊராட்சி, கத்தலூர் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம் 1999 ஆம் ஆண்டு முதல் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையக் கட்டடத்தில் மேல்கூரை, தரை தளம் மற்றும் சுவர் பழுதடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அங்கன்வாடி மையக் கட்டடங்களில் உள்ள பெரிய பழுதுகளை நீக்க ரூ.39 கோடியே 14 இலட்சமும், சிறிய பழுதுகளை நீக்க ரூ.52 கோடியே 84 இலட்சமும் ஒதுக்கீடு செய்து, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், கத்தலூர் ஊராட்சி, கத்தலூர் கிராமத்திலுள்ள இரண்டு அங்கன்வாடி மையங்கள் ரூ.90,000/- செலவில் சீர்செய்யப்பட்டு ஜனவரி 2013 ஆம் ஆண்டு

2013 மார்ச் 25]

முதல் நல்லமுறையில் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊற்றுப் பெருக்காய் உள்ளங்களை நனைத்து, இல்லங்களை மகிழ்விக்கின்ற வரியே இல்லாத பட்ஜெட்டை வாரி வழங்கிய இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கெல்லாம் 13 வகையான கலவை சாதத்தை அறிமுகப்படுத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க ஈகைத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விராலிமலை சட்டமன்றத் தொகுதி, கத்தலூர் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்தினைச் சீரமைக்க, நிதி ஒதுக்கி, அந்தப் பணியினை மிகச் சிறப்பாக முடித்ததற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பில் கோடானுகோடி நன்றிகளையும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, விராலிமலை தொகுதியில் உள்ள மற்ற அங்கன்வாடி மையங்களையும் இதுபோன்று சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு, நன்றி கூறி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விராலிமலையில் உள்ள மொத்த அங்கன்வாடி மையங்களின் எண்ணிக்கை 142. அரசு கட்டடங்களில் இயங்கி வருபவை 112. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருபவை இரண்டு. வாடகை இல்லாத கட்டடங்களின் மூலமாக இயங்கி வருபவை 28. பெரிய பழுது நீக்கம், சிறிய பழுது நீக்கம் செய்ய அரசால் கருத்துரு பெறப்பட்ட மையங்களின் எண்ணிக்கை 57. இவற்றில் விராலிமலை தொகுதியில் உள்ள மையங்களாகக் கண்டறியப்பட்ட 37 மையங்களில், சீரமைப்புப் பணிகள் முடிந்துவிட்டன. மேலும், 20 மையங்களின் சீரமைப்புப்

பணிகள் மிக துரிதமாக நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்களின்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

50—

மாணவர் விடுதி

***15280—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, இராமநாதபுரம் சேதுபதி அரசு கலைக் கல்லூரியில் மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரத்தில் உள்ள சேதுபதி அரசு கலைக் கல்லூரியில் 1,804 மாணவ, மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். அந்தக் கல்லூரியில் ஆதி திராவிடர் நல விடுதியில் 138 மாணவர்களும், பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியில் 56 மாணவர்களும் விடுதியில் தங்கி, கல்வி பயின்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேதுபதி அரசு கலைக் கல்லூரியில் மாணவியர் விடுதி கட்டுவதற்காக பல்கலைக்கழக மானியக் குழு, அதாவது U.G.C. சில ஆண்டுகளுக்கு முன்பு நிதி ஒதுக்கீடு செய்தும், இன்னும் கட்டப்படவில்லை. அதைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.